மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது குறித்த பரிசீலனையை விரைவுபடுத்த அரசு முயற்சிக்கும்.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்போது பாகப்பிரிவினை என்று வந்து விட்டதோ அப்போது எங்களுக்குண்டான பாகத்தை உவந்தளித்த கல்வி அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு புரட்சித்தலைவி ஆட்சிக்கும் நன்றியைக் கூறி செங்கம் தொகுதியின் மக்கள் சார்பாகவும் எங்கள் மாவட்டத்தில் சார்பாகவும் நன்றி கூறி அமைகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நன்றி சொல்வதோடு ஏதாவது ஒரு கேள்வி கேட்க வேண்டும்.

வினா எண் 366. திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்

366—

கம்மான்பேட்டையில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தல்.

*10924—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கணியம்பாடி ஒன்றியம், கம்மான்பேட்டையில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கணியம்பாடி ஒன்றியத்தில் உள்ள கம்மான்பேட்டையில் ஒரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

(ஆ) கேள்வி எழாது.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அங்கே இயங்கி வருகிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இருப்

பினும் அப்பகுதியில் 4, 5 கிராமங்களில் ஏறத்தாழ 30,000 மக்கள் வசித்து வருகிற காரணத்தால் அங்கே இருக்கிற மக்கள் எல்லாம் வேலூருக்குத்தான் சென்று வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அதை தயவுசெய்து விஸ்தரிப்பு செய்து இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை நிறுவ அமைச்சர் முன் வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அங்கே இரண்டு மருத்துவர்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால் சொந்தமான கட்டிடம் இல்லாமல் வாடகைக் கட்டிடத்திலே இருந்து அந்தப் பணியைச் செய்து கொண்டு இருக்கிறார்கள். கட்டிடம் கட்டுவதற்கான முயற்சியை எடுக்கலாம் என்று சொல்லி 5 ஏக்கர் நிலம் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எனவே அது கிடைத்த பின்னாலே அரசின் நிதி நிலைமைக்கேற்ப கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டுவதற்கு இந்து சமய அறநிலையத்துறைக்குச் சொந்தமான ஒரு இடத்தைத் தேர்வு செய்து அரசுக்கும் அது அனுப்பப் பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் அந்தத் துறையுடன் பேச்சு நடத்தி அந்த நிலத்தைக் கையகப்படுத்தி அங்கே ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத்துறையோடு தொடர்புகொண்டு அந்த நிலத்தைக் கொடுங்கள் என்று கேட்கலாம். நிதித்துறையோடும் தொடர்பு கொண்டு நிதிநிலை கேற்ப பணத்தைப் பெற்று அது கிடைக்கிறபோது கட்டிடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிறப்பான பதிலைத் தந்த அமைச்சர் அவர்களுக்கும் நமது இதயதெய்வம் புரட்சித்தலைவி அரசுக்கும் நன்றியைக் கூறிக்கொண்டு, வரும் நிதி ஆண்டில் இதைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் நிதி ஆண்டுகளில் இதைப்பற்றி யோசிக்கலாம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆ. கு. சீனிவாசன், உங்களுடைய தொகுதி இதில் வருகிறதா ?

திரு. ஆ. கு. சீனிவாசன் : பொதுவான பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படியானால் உட்காருங்கள். இது அவருடைய தொகுதி சம்பந்தப்பட்டது. அவருக்கு ஏற்கெனவே கூடுதலாகவே ஒரு கேள்வி அனுமதிக்கப் பட்டுவிட்டது.

வினா எண் 367, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

367—

வத்தலகுண்டு அரசு மருத்துவமனை.

*11173-ஏ—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வத்தலகுண்டு அரசு மருத்துவமனைக்குப் போதுமான அளவில் இடவசதி இல்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், போதுமான இடவசதி செய்துதர எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மற்ற மருத்துவமனைகளைப் போல் வத்தலகுண்டு மருத்துவமனையிலும் பொதுமக்கள் அதிக அளவில் பயன்பெறுகிறார்கள். எனவே அரசின் நிதி வசதிக்கேற்ப படிப் படியாக கட்டிட வசதிகளும் மற்ற வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வத்தலகுண்டு மருத்துவமனை வத்தல குண்டு அல்லது நிலகோட்டை பகுதி மக்களுக்கு மட்டும் பயன் படவில்லை. கொடைக்கானல், அடியனூர், பன்றிமலை, பண்ணைக்காடு, பெருமாள்மலை போன்ற பகுதி மக்கள் எல்லாம் வத்தலகுண்டு ஆஸ்பத்திரிக்கு வந்துதான் வைத்தியம் பண்ணிக் கொள்ளக்கூடிய நிலைமை இருக்கிறது. அவர்கள் படுப்பதற்கு கட்டில் இல்லாமல், சிரமப்படுகிறார்கள். ஆகவே பக்கத்தில் உள்ள நிலத்தை மக்கள் நலனைக் கருதி எடுத்து இந்த ஆண்டி லேயே அந்த மருத்துவமனையை விரிவு படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.